# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශේෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2365/26 - 2024 ජනවාරි මස 03 වැනි බදාදා - 2024.01.03

2365/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 3/2/1/143.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/18/2017/WS/ 525.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் இல. 125/2, மினுவங்கொடை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மெவெட முல்லை என்ற ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் சார்பாக கம்பஹா சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட 2023.08.18 ஆந் திகதியை உடைய ஆரம்ப கடத்திரல் வரைபட இலக்கம் 510511 இல் காணித்துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.0254 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: கோன்கஹவத்தை அல்லது கோன்கஹவத்தே கெபல்ல; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: கலுஆரச்சிலாகே மாலா மங்கலிகா கலுஆரச்சி; விஸ்தீரணம்: 0.0254 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம்

ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மினுவங்கொடை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. டபிள்யூ. டீ. யூ. ராஜகருணா,
பிரதேச செயலாளர்,
மினுவங்கொடை.

பிரதேச செயலகம்,
மினுவங்கொடை.
2023, நவெம்பர் 29.

EOG 01 - 0034